# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (17.08.2022 முதல் 21.08.2022 )

**அறிக்கை எண் 065/2022** **தேதி.16.082022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 08°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (12.08.2022 முதல் 15.08.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 21.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/08 | 13/08 | 14/08 | 15/08 | தேதி | நாள்-1 17/08 | நாள்-2 18/08 | நாள்-3 19/08 | நாள்-4 20/08 | நாள்-5 21/08 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 8 | 15 | 12 | 3 | 0 |
| 31 | 32 | 33 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 35 | 33 | 33 | 34 |
| 23 | 22 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 23 | 24 | 24 |
| 6 | 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 6 | 5 |
| 66 | 80 | 83 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 75 | 75 | 70 | 65 |
| 54 | 63 | 64 | 59 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 65 | 65 | 55 | 55 |
| 24 | 16 | 16 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 230 | 200 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 250 | 270 | 270 | 270 | 290 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (17.082022 முதல் 21.08.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 17-08-2022 | 15 | 17 | 18 | 24 | 18 | 18 | 18 | 13 | 17 | 20 | 18 | 18 | 21 | 20 |
| 18-08-2022 | 47 | 49 | 52 | 50 | 46 | 54 | 47 | 43 | 51 | 44 | 50 | 50 | 54 | 47 |
| 19-08-2022 | 57 | 59 | 58 | 64 | 62 | 57 | 62 | 65 | 59 | 65 | 60 | 60 | 59 | 62 |
| 20-08-2022 | 23 | 28 | 25 | 39 | 40 | 24 | 38 | 25 | 25 | 51 | 33 | 33 | 26 | 38 |
| 21-08-2022 | 9 | 12 | 7 | 21 | 22 | 4 | 21 | 13 | 7 | 33 | 14 | 14 | 7 | 21 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் மேற்கொள்ள வேண்டும். மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். |
| நெல் | நடவு மற்றும் பூக்கும் பருவம் | லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் பயிர் நடவு செய்வதனை தொடரவேண்டும். எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி நடவு செய்த கார் பருவ நெல்லுக்கு 2வது மேலுரமாக ஒரு ஏக்கருக்கு யூரியா 25 கிலோ மற்றும் பொட்டாஷ் 10 கிலோ இட வேண்டும். மழை எதிர்பார்க்கப்படுவதால், விதைப்பு செய்யப்பட்ட நெல் நாற்றாங்காலில் விதை பாதிப்பை தடுக்க மாலை வேலைகளில் அல்லது மழை வரும் சமயங்களில் நீர் தேக்கி மறுநாள் காலை தண்ணீரை வடிக்கவும். |
| நிலக்கடலை | வளர்பருவம் | காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு கார்பன்டெசிம் 500 கி அல்லது மான்கோசெப் 1000 கி என்றளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். |
| கரும்பு | வளர்பருவம் | மேகமூட்டமான வானிலை மற்றும் கடந்த வாரங்களில் பொழிந்த மழையால் கரிசல் மண்ணில் சாகுபடி செய்யப்பட்ட பின்பட்ட கரும்பில் இரும்புச்சத்து குறைபாடு காணப்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சதம் அன்னபேதிஉப்பையும் மற்றும் 1 சத யூரியாவையும் கலந்து தெளிக்க வேண்டும். வரும் ஐந்து நாட்களில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் |

| | | |
|---|---|---|
| | | பின்பட்ட கரும்பிற்கு இரண்டாவது தவணையாக ஒரு ஏக்கருக்கு 85கிலோ யூரியா மற்றும் 25கிலோ பொட்டாஷ் உரம் இட்டு மண் அணைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொடிவகை பயிர்கள | விதைப்பு | ஆடிப்பட்டம் கொடிவகை பயிர்களான பீர்க்கங்காய், பாவற்காய், புடலைங்காய் போன்ற பயிர்களை விதைப்பதற்கு உகந்த காலமாகும். ஆதலால் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் விதைப்பு எடுக்குமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் அல்லது 1000 கிராம் மேன்கோசெப் அல்லது 1250 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.<br>மேகமூட்டமான வானிலை மற்றும் கடந்த வாரங்களில் பொழிந்த மழையால்இறவை மஞ்சளில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு தென்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க ஒரு எக்டருக்கு 250 லிட்டர் தண்ணீரில் பெரஸ்சல்பேட், ஜிங்சல்பேட், போரக்ஸ் மற்றும் யூரியா கலந்து ஒவ்வொன்றும் 375 கிராம் கலந்து தெளிக்க வேண்டும். 25 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தள்ளிப்போட வேண்டும். |
| தென்னை | | தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | தொடர்மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.<br>தற்போதைய வானிலை கறவை மாடுகளில் நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவ வேண்டும். |

## குறுஞ்செய்தி

- மேகமூட்டமான வானிலையில் கரும்பில் இரும்புச்சத்து குறைபாடு காணப்பட்டால் 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சதம் அன்னபேதிஉப்பையும் மற்றும் 1 சத யூரியாவையும் கலந்து தெளிக்கவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**